THE HON. THIRU S. RAMACHANDRAN : This has nothing to do with the Town Panchayats. It is a Township constituted and headed by the Collector. As such, I have no information.

THIRU K. S. KOTHANDARAMAIAH : There is a proposal to form a Township consisting of 7 Panchayats. The Panchayats have not been in favour of this proposal and they have passed a Resolution contradicting the proposal. The want direct administration by the Government and not the Township. May I know from the Hon. Minister for Local Adiminstration whether he will kindly honour the Resolutions passed by the Panchayats?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, all these aspects will be given careful attention while a final decision is taken on the proposal.

*62 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகாரை நகரியமாக்கும்படி கீழத் தஞ்சை மாவட்ட துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அபிவிருத்திக்குழு அரசுக்கு கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) பூம்புகார், வானகிரி, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய மூன்று ஊராட்சிகளை இணைத்து அப்பகுதிக்கு பூம்புகார் என்ற பெயரில் ஓர் நகரியம் அமைக்கும் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது. இதன்மீது மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கருத்தை அறியுமாறு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவரது அறிக்கை வரப்பெற்ற பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: புதிய பூம்புகார் நிர்மாணிக்கப்படுகிற அடிப்படையில் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முயற்சியினால் முன்பிருந்த இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதச்சதுக்க மன்றம், பாவைமன்றம் ஆகியவை பூம்புகாரில் உருவாக்கப்பட்டுள்ளன. முன்பிருந்த மங்கலவீதியும், கூல வீதியும், தென்றல் வீதியும், நாளங்காடியும், பட்டினப்பாக்கமும்,

மருவூர்ப்பாக்கமும்—அந்த மருவூர்ப்பாக்கத்தில் வேயாமாடமும், வியன்கல இருக்கையும், மாங்கட்காதலர் மாளிகை இடங்களும் அங்கே தூசும்-துகரும்-ஆரமும்-அகிலும் மாசறுமணியும் முத்தும் பொன்னும் விற்றிடும் நிலையினை உருவாக்கி, தொழில் பல பெருக்கி, சிறப்பான நிலையில் சிலப்பதிகாரத்தில் உள்ளதைப் போன்று பண்டைய நிலையை உருவாக்கிட அரசு மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. கிட்டப்பா அவர்கள் இப்போது படித்ததை அப்படியே கொடுத்தால் அதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு ஆராயப்படும்.

திரு. என். கிட்டப்பா : இது படித்தது மட்டுமல்ல. சிலப்பதிகாரத்தில் உள்ளதைப் படித்தேன். சிலப்பதிகாரத்தில் இருப்பதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்போல் எனக்குச் சொல்லத் தெரியாத காரணத்தினால் அது தவறி விடக்கூடாது என்ற காரணத்தினால் அதை ஓரளவு ஒழுங்குபடுத்தி வைத்து படித்துக் காட்டினேன்.

DR. H. V. HANDE : May I know from the Hon. Minister whether a large areas of the proposed township are likely to be submerged because of the reduction in the elevation level between sea and land? The proposal, as announced by the Hon. Chief Minister is likely to cause erosion in that area. What are the concrete steps taken by the Government to prevent sea erosion in that area? What are the concrete steps taken to prevent this catastrophe?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the hon. Member's anxiety should be answered by the Public Works Department. As far as this Department is concerned, it is connected with the constitution of Townships. Even that matter is still pending with the Government.

திரு. நா. வீராசாமி : சுற்றுலா இடங்கள் போன்றவைகள் எல்லாம் நகரியங்களாக ஆக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைய தினம் பூம்புகாருக்கு லட்சம் மக்களுக்கு மேல் வந்து பார்த்திருக்கிறார்கள். அங்கே போய் பார்க்கக்கூடிய அளவிற்கு அது பெரிய ஒரு சுற்றுலா இடமாக ஆக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தை நகரியமாக ஆக்கும்போது

மத்திய அரசு இதற்கு ஏதாவது உதவி செய்கிறதா? இல்லை என்றால் அதை நல்ல முறையில் ஒரு நகரியமாக்குவதற்கு நம் அரசு மத்திய அரசிடம் நிதி உதவி கேட்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற விவரம் என்னிடம் இல்லை. ஆனால் மத்திய அரசிடத்திலிருந்து சுயாட்சி எதிர்பார்க்கிற அரசு இதை எதிர் பார்க்கவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: வருங்காலத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்களின் தொகுதியாகப் போகிறது என்ற காரணத்தினால் இவ்வளவு தனி அக்கறை காட்டப்படுகிறது பூம்புகார் குறித்து. மத்திய அரசிடமிருந்து உதவி எதுவும் எதிர்பார்க்காது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எதுவுமே நீங்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்கியது கிடையாதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பாஞ்சாலங்குறிச்சியில் கூட கட்டபொம்மனுக்காக கோட்டை கட்டப்பட்டு நகர் அழகு படுத்தப்பட்டது. பூம்புகாரில் மீனவர்களுக்காக குடில்கள் அமைக்கப்படுவதுபோல் அங்கும் கட்டபொம்மன் வாரிசுகளுக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அங்கே நான் நிற்கப் போவதாக அம்மையார் அவர்கள் கருதிக் கொள்வதா ? எங்கேயோ ஒரு இடத்தில் தமிழ் நாட்டில் நிற்பேன். அவ்வளவுதான்.

ஆலயங்களில் நுழைவுக் கட்டணம்.

*63 வினா—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எந்தெந்த ஆலயங்களில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அவையில் இதுபற்றி அறிக்கை * ஒன்று வைக்கப்படுகின்றது.

திரு. கோ. இளங்கோவன்: சில ஆலயங்களில் நுழைவுக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. அதை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

---

* 156-158-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.